Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி-20 | 02-04-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -044

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
(சி-9440)
RV
பந்தல் சேவை,
தர்மபுரம்.

# யாழ், வன்னித் தேர்தல் மாவட்டங்களில்

# த.தே.கூ. பெரும் வெற்றிபெறும்!

## -இறுதிநேர மதிப்பீடு தெரிவிப்பு

**யாழ்.மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெருவெற்றி பெறும் என இறுதிநேரத் தேர்தல் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இவ்விரு தேர்தல் மாவட்டங்களிலும் வன்னி மாவட்டத்தில் ஓரிரு ஆசனங்களைத் தவிர அனைத்து ஆசனங்களையும் இக்கூட்டமைப்பு கைப்பற்றுவது உறுதி என இம்மதிப்பீட்டின் மூலம் அறியவருகின்றது.**

சிறிலங்காவின் 13வது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் இன்று நடைபெறுவுள்ள நிலையில் மூன்று தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு ஒன்று யாழ்.தேர்தல் மாவட்டத்திலும், வன்னித் தேர்தல் மாவட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோகவெற்றியீட்டும் எனத் தெரிவிக்கின்றது.

அதிலும குறிப்பாக யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அனைத்து ஆசனங்களையும் கைப்பற்றுவதற்கான வாய்ப்பும் வன்னித்தேர்தல் மாவட்டத்தில்மூன்றில்இரண்டிற்கு மேற்பட்ட அளவிலான ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளதாக இம்மதிப்பீடு கூறுகின்றது.

(ivஆம் பக்கம் பார்க்க)



# பல்லாயிரக்கணக்கான வன்னி வாக்காளர்கள் புளியங்குளம், பளையில் திரண்டனர்

இன்று நடைபெறவுள்ள தேர்தல் வாக்களிப்பில் கலந்துகொள்ளவென பல்லயிரக்கணக்கான வன்னிப்பிரதேச மக்கள் புளியங்குளத்திலும் ,பளையிலும் திரண்டுள்ளனர். நேற்றுக்காலை முதல் இவர்கள் இப்பகுதியில் ஒன்று திரண்டனர்.

தேர்தலில் வாக்களிப்பதற்கு புளியங்குளத்திற்கு மக்கள் பெருமளவானோர் சென்றுள்ளனர். மக்களுக்கான சகல போக்குவரத்து ஒழுங்குகளும் சிறப்புற மேற்கொள்ளப்பட்டன. இங்கு தங்குவதற்கென சகல வசதிகளையும் அதாவது குடிநீர் உணவு மருத்துவ சேவை என சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மழை பெய்து கொண்டிருந்த வேளையிலும் மக்கள் அதனைப் பொருட்படுத்தாது பெரும் ஆர்வத்துடன் வந்துகொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. மற்றும் முல்லை மாவட்ட அரச அதிபரின் தேர்தல் கடமைக்கான கிளைப்பணி மனை புளியங்குளத்திலும் ஓமந்தை வாக்களிப்பு நிலையத்திற்கு முன்பாகவும் அமைக்கப்பட்

(ivஆம் பக்கம் பார்க்க)



வாக்களிப்பிற்காக நேற்று பளையில் திரண்டிருந்த மக்கள்.

# மல்லாவியில் மின்னல் தாக்கி இளைஞன் ஒருவர் மரணம்

மல்லாவிப்பகுதியில் நேற்று மின்னல் தாக்கியதில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மாலை மூன்று மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மல்லாவி 3ஆம் யூனிற்றைச் சேர்ந்த தெய்வேந்திரம் வசிகரன் (வயது21) என்பவரே உயிரிழந்தவராவார்.இவர் தனது வீட்டில் தங்கியிருந்தவேளை இவரை மின்னல்தாக்கியுள்ளது. (24)

# மட்டு.வைத்தியசாலையில் இருந்து வடபகுதி வைத்தியர்கள் வெளியேற்றம்

## கருணாவின் செயலுக்கு எதிராக மறியல்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் முன்பாக கருணாகுழுவின் நடவடிக்கைகளை ஆட்சேபித்து நேற்று வைத்தியசாலை ஊழியர்களால் மறியல் போராட்டம் நடைபெற்றது.

மட்டு.போதனா வைத்தியசாலையிலிருந்து வடபகுதியைச் சேர்ந்த ஆறு விசேட வைத்தியர்கள், மருத்துவர்கள் உட்பட மொத்தம் 15பேர் கருணா குழுவால் வெளியேற்றப்பட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்ட மருத்துவர்கள் இந்த மறியலில் ஈடுபட்டனர்.

இந்த மருத்துவர்கள் வெளியேற்றப்பட்ட நிலையில் போதனா வைத்தியசாலை மிகுந்த நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதாகவும் ஏழை நோயாளிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் மட்டு-போதனா

(ivஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் ஆணையாளரைத்தவிர எவரும் இராணுவத்தை அழைக்க முடியாது

## -அமைச்சரவையில் தீர்மானம்

தேர்தல் ஆணையாளரைத் தவிர வேறு எவருக்கும் தேர்தல் கடமைகளைகண்காணிப்பதற்கு இராணுவத்தை அமைப்பதற்கு அதிகாரம் இல்லை என நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை முப்படை அதிகாரிகளுக்கும் அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசியல்யாப்பு 104 சரத்தின்படி தேர்தல் கடமைகளுக்குஇராணுவத்தைப் பயன்படுத்தும் அதிகாரம்தேர்தல் ஆணையாளருக்கே உண்டு எனஅரசாங்கம் அறிவித்துள்ளது. இதன்படி முப்படைஅதிகாரிகளும்தேர்தல் ஆணையாளரின் கட்டளைக்கு அடிபணிய வேண்டும் என அமைச்சரவை அறிவித்துள்ளது.

### திருத்தம்

நேற்று "கருணாவின் அறிவுறுத்தலை ஏற்காதீர் -மட்டு. அம்பாறை மக்களிடம் புலிகள் கோரிக்கை" என்ற தலைப்பிலான முன்பக்கச் செய்தியில் முதற்பந்தியில் நான்காவது வரியில் ஏற்கவேண்டாம் என இடம்பெற்றிருக்க வேண்டியது, ஏற்க வேண்டும் எனத் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. இத்தவறிற்கு மிகவும் மனம்வருந்துகின்றோம்.

# கருணா குழுவின் நடவடிக்கைகள் சமாதானத்திற்கு அச்சுறுத்தல்

## ஐ.நா.சபையின் 4 அமைப்புக்கள் கோரிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பிலிருந்து கருணா குழுவால் வடமாகாண தமிழர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் நான்கு அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

தற்போதைய சூழ்நிலை பாரதூரமானது எனக் குறிப்பிட்டுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி மையம், அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகரகம், ஐ.நா. சிறுவர் மையம் மற்றும் உலக உணவுத்திட்டம் ஆகியன இந்த நிலைமை பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளன.

ஐ.நா.வின் மனித உரிமைப் பிரகடனம் 3ஆம் பந்தியின்படி இலங்கையின் அனைத்து மக்களும் குறிப்பாக மட்டக்களப்பு

(ivஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் தமிழீழத் தேசியத் துணைப்படைவீரர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

2ஆம் லெப்.வீரசிங்கம்

(iv.ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கணினிப் பயிற்சி

பாடசாலை மாணவர்களின் விடுமுறையைப் பயனுள்ள முறையில் கழிக்க விசேட கணினிப் பயிற்சிநெறி, 40 நாட்கள மட்டுமே. கட்டணம் 750/= மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள். ஆரம்பம்:- 03.04.2004 காலை 9.00 மணி. தொடர்புகளுக்கு:- DB TECH 155ம் கட்டை, கிளிநொச்சி. (4407)

### அமுதன் கல்வி நிலையம்

புதுக்குடியிருப்பு

A/L 2006 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது.கலைப்பிரிவு:-03.04.2004பி.ப.3.00 மணி. க.பொ.த(சா/த)மீட்டல் 03.04.2004 பி.ப.3.00 மணி(வழமையான ஆசிரியர்குழுவினர்) (4065)

### Science Hall

புதுக்குடியிருப்பு

A/L 2006ற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது. வர்த்தகப்பிரிவு- 03.04.2004 பி.ப.3.00மணி விஞ்ஞானப்பிரிவு- 03.04.2004காலை.8.00 மணிக்கு (வழமையான ஆசிரியர் குழுவினர்) (4066)

### ஆதவன் கல்வி நிலையம்

A/L 2006 கலை,வர்த்தகம் ஆரம்பம். 03.04.2004 சனிக்கிழமை காலை 9.00 கலைப்பிரிவிக்குரிய சகல பாடங்களும் நடை பெறும். நிர்வாகி. (4414)

### O/L பகல்நேர வகுப்பு

03/04/2004 சனிக்கிழமை காலை:-9.00 மணிக்கு ஆரம்பமாகிறது. வெண்ணிலா கல்வி நிலையம் மல்லாவி.A/L 2006 கலைப்பிரிவு 07/04/2004 (புதன் கிழமை) காலை:-9.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. வெண்ணிலா கல்வி நிலையம், மல்லாவி. (4120)


## பொலிஸ் அதிகாரி வேலை நீக்கம்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக தேர்தல் வேலைகளில் ஈடுபட்டிருந்தார் என குற்றம் சாட்டி மூதூர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் தவ்பீக் வேலையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என மூதூர் பொலிஸ் உயர்அதிகாரி தெரிவித்துள்ளார்.

# கண்காணிப்புக் குழுத்தலைவர்-ரணில் கிழக்கின் நிலைகுறித்து ஆராய்வு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மற்றும் சிறிலங்காவிற்கான நோர்வேத்தூதுவர் ஆகியோருடன் கிழக்குப் பிரதேச நிலை குறித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அலரிமாளிகையில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. இதன்போது கடந்தசில தினங்களாக மட்டக்களப்பில் இடம் பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் குறித்து கூடியகவனம் செலுத்தப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரதமரின் செயலாளர் பிரட்மன்வீரக்கோன், மற்றும் பிரதமரின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் பேனாட் குணதிலக ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கிழக்குப் பிரதேசத்தின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

# மன்னார் மாவட்டத்தில் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

மன்னாரில் இன்று நடைபெறவிருக்கும் 13ஆவது பொதுத்தேர்தலுக்கு வாக்களிப்பு நடத்துவதற்காக சகல ஏற்பாடும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளன. மன்னாரில் நேற்று அல் அஸ்ஹர் மத்திய மகா வித்தியாலயத்திற்குப் தேர்தலில் கடமைபுரி உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டனர். மொத்தமாக 67வாக்கெடுப்பு நிலையங்களில் 78280பேர் வாக்களிக்கவுள்ளார்கள். இதில் உயிலங்குளம், வண்ணாமோட்டை மடுவீதி பரியாரி கண்டல் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் கொத்தணி வாக்கெடுப்பு நிலையங்களாகும். இதற்கென விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழும் வாக்காளர்கள் நீண்டகாலத்தில் பின்னர் தேர்தலில் வாக்களிக்க உள்ளார்கள். மாந்தைமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து வரும் வாக்காளர்கள் வண்ணாமோட்டை, உயிலங்குளம் போன்ற இடங்களில் அமைந்திருக்கும் வாக்கெடுப்பு நிலையங்களிலும் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்துவரும் வாக்காளர்கள் மடு வீதியில் அமைந்துள்ள வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்களிக்க உள்ளார்கள். இதில் மொத்தமாக 14350பேர் வாக்களிக்க உள்ளார்கள் இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் உணவுவசதிகள் ஆகியவற்றை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்உட்படஅரசியல் துறைப் பொறுப்பாளர்கள் புனர்வாழ்வு நிறுவனங்கள் இணைந்து செய்துள்ளன இத்தடவை தமிழ் மக்கள் முக்கியமாக இராணுவக் கட்டுப்பாடு இல்லாத இடங்களில் வாழும் வாக்காளர்கள் வாக்களிக்க மிகவும் ஆர்வமாக உள்ளார்கள். இவர்களுக்கு எப்படி வாக்களிப்பது என்பது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.(மி)

# கருணாவின் நான்கு அடியாட்கள் மட்டு. பொலிசாரால் கைது!

## -14 நாட்கள் விளக்கமறியலுக்கு உத்தரவு

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்டகருணா குழுவினின் அடியாட்களில் ஒருவரான சச்சிமாஸ்ரர் என்பவரும் அவரது குழுவினரும் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காத்தான்குடியில் இடம் பெற்றுள்ளது.

போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் ஆயுதங்கள் சகிதம் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் சென்ற போதே இந்தக் குழுவினர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித் துள்ளனர்.

சச்சிமாஸ்ரர் என அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன், மயூன் என்று அழைக்கப்படும் சாமித்தம்பி ராஜன் மனோகரன்உள்ளிட்டோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

டொல்பின் வாகனத்தில் வந்த இவர்களை பொலிசார் சோதனையிட்ட போது அவர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கிகளுக்கான 73 ரவைகள்,5கைக்குண்டுகள், சயனைட்குப்பிகள் மற்றும் மூன்று சஞ்சிகைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை பதின்நான்கு நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை இதற்கு முதல் தினமும் இதேபோன்ற சம்பவம் பார்வீதியிலும்,பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு அண்மையில் நடைபெற்றுள்ளது. வானில் ஆயுதங்களுடன் வந்த சிலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கருணாநேரடியாக பொலிசாருடன் தொடர்பு கொண்டுஅவர்களை விடுவித்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வீதியைக் கடக்க எத்தனித்தவர் மீது உந்துருளி மோதியதில் காயம்

## யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதி

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி ஏ-9 நெடுஞ்சாலையில் நெடுஞ்சாலையினைக் கடக்க எத்தனித்த நபரொருவரை வேகமாக வந்த உந்துருளி மோதியதில் உந்துருளி ஓட்டுநரும் சாலையை கடக்க எத்தனித்த நபரும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பி.ப 2.00 மணியளவில் கிளி. கந்தசுவாமி ஆலயத்திற்கும் கரடிப்போக்குச்சந்திக்குமிடையில் ஏ-9 நெடுஞ்சாலையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் கிளி.மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பெற்று சிகிச்சை மேற்கொள்ளப் பெற்ற பொழுதி ் மேலதிக சிகிச்சை மே ொள்ளும் பொருட்டு நேற்றுமுன்தினம் மாலை கிளி.மாவட்ட அம்புலன்ஸ் வண்டிமூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பம் குறித்து தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்துப்பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (சோ)

## விளையாட்டுவிழா

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவு கழகங்களுக்கிடையிலான விளையாட்டுவிழா 2004 நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம் தலைமையில் கிளி/கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 6ஆம்,7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (சோ)

# ஒரு ஆசனத்தையேனும் பெறாத கட்சிகளின் விருப்பு வாக்குகள் எண்ணப்படமாட்டாது

## -தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

இன்று பொதுத் தேர்தலில் போட்டியிடும் அரசியல்கட்சிகள் சுயேட்சையில் போட்டியிடும் குழுக்கள் பாராளுமன்றம் செல்வதற்கு ஆசனங்கள் ஒன்றாவது பெறாவிட்டால் அவர்களின் விருப்பு வாக்குகள் எண்ணப்படமாட்டாது. ஆனபடியால் கட்சி வேட்பாளர்கள் வாக்குச்சீட்டுக்கள் எண்ணும் இடத்திலிருந்து வெளியேறவேண்டும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். பொலிஸ்மா அதிபர் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் முன்னிலையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# மேலும் சில பாடசாலைகளின் க.பொ.த.(சா/த)பரீட்சைப் பெறுபேறுகள்

2003ஆம் ஆண்டிற்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி சிறப்புச் சித்தி எய்தியமேலும் சில பாடசாலைகளின் மாணவ மாணவியரின் பெயர் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மு. மல்லாவி மத்திய கல்லூரி க.பொ.த. சாதாரணதர முதன்மைப் பெறு பேறுகளில் ஆ.சுகர்சியா 8ஏ,2பி, தி.உஷா 8ஏ,2பி, தி.கிருசாந்தி 6ஏ,1பி,2சி,எஸ் த.நிறஞ்சன் 6ஏ,2பி,சி,எஸ், தெ.பாமினி, 4ஏ,பி,4சி, எஸ், மு.துணுக்காய் அ.த.க.பாடசாலை செல்வி இரகுநாதன் மிதுனா 05ஏ,2பி, 2சி, பா.சுபிதா 3ஏ, பி, 3சி,2எஸ், கு.கௌதமன் 3ஏ, பி.4சி,எஸ்,இவர்களுடன் மேலும் க.பொ.த உயர்தரம் கற்பதற்கு 4 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர் .மு.இரணைப்பாலை றோ.க.ம.வி.செல்வன் அ.யூலீட்றியாட் 5ஏ ,03சி,2எஸ், செல்வன் அ.மரியபிரான்சிஸ் றொசான் 4ஏ, 3பி,1சி,2எஸ்,செல்வன் யோ..அச்சுதன் 3ஏ,4பி,1சி,2எஸ், செல்வி செ.மேரியறோசியா 3ஏ,1பி,3சி, 3 எஸ்,

இதேவேளை வற்றாப் பளை மகாவித்தியாலையத்தின் சிறந்த பெறுபேறுபெற்ற மாணவர்கள் சிலரின் பெயர்கள் தவறவிடப்பட்டுள்ளன அம்மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு. சி.நீவிதா 5ஏ,2பி,2சி, க.திலீபன், 4ஏ, 3சி, அ.சதீசனா ஏ.3பி,3சி, 2எஸ், பொ.சுஜிதா 2ஏ, 4சி,2எஸ், பெ.யூலியா ஏ,பி,2சி,3எஸ், ந.அகிலநேசன் 3பி, 3சி, 2எஸ், கு.குலதீபன் ஏ,3சி,4எஸ். (24,26)

## -முல்லை புதுக்குடியிருப்பில்

# குழந்தைகளுக்கான மருத்துவ நிபுணர் இருதினங்கள் மருத்துவ சேவை

குழந்தைகளுக்கான மருத்துவ நிபுணர் ஒருவர் புதுக்குடியிருப்பிலுள்ள முல்லை மாவட்ட வைத்தியசாலையிலும், முல்லைத்தீவிலுள்ள கட்டம்-1 வைத்தியசாலையிலும் 12வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைப் பார்வையிடவுள்ளார்.

புதுக்குடியிருப்பிலுள்ள மாவட்ட வைத்தியசாலையில் 03.04.04 அன்றும் 04.04.2004 கட்டம்-1 வைத்தியசாலையிலும் குழந்தைகளுக்கான மருத்துவ நிபுணர் குழந்தைகளை பார்வையிடுவார் என முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி ஜி.சி.தர்மேந்திரா தெரிவித்துள்ளார்.


## நான்காம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்

23

08

1967



தாயக மண்ணில்

02

04

2000

# மேஜர் அமுதா

(கந்தையா சரஸ்வதி)

(கந்தசாமி கோயிலடி, கோப்பாய் மத்தி)

கோவைமண்ணில் உதித்த கோமகளே
அன்னையின் அரவணைப்பில் உயர்ந்தவளே
பள்ளியில் கலைபயின்று பண்பால் சிறந்தவளே
பார்போற்ற வளர்ந்த கலைமகளே
விடுதலை வேட்கையினால் வீறுகொண்டு எழுந்தவளே
வீணரை விரட்டி விழுப்புண் ஏற்றவளே
மருத்துவத்தின் நாயகியாய் பணிகள் பல புரிந்தவளே
கனிவான மொழிபேசி தோழர்களை ஆதரித்தவளே! அம்மா

மண்ணிலே புயல்பொங்கி எழுந்தவேளை
அலையெனவே ஆர்ப்பரித்த எங்கள் அமுதா
வித்துடலாய் நீ இங்கு வந்த வேளைதனில்
உன்னைப்பெற்றவரும் சோதரரும் தோழர்களும் கலங்கி நின்றோம்.
தன்மானம் பெரிதென்று தாயகம் மீட்டிடவே
வித்தாகிப் போன சரஸ்வதியே
தர்மம் என்றும் வெல்லும் அம்மா!
இதுவே வரலாற்றின் நியதியம்மா.

02.04.2000 அன்று ஓயாத அலைகள் மூன்று வெற்றிச் சமரின்போது எங்கள் அமுதாவுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (சி-9345)

குடும்பத்தினர்
மா.கந்தையா

# தமிழ்த்தேசியத்தை ஆதரித்து மக்கள் கூட்டமைப்புக்கே வாக்களிப்பர்

## பல்வேறு மட்டத்திலும் அபிப்பிராயம்

(அலுவலக செய்தியாளர்)

எமது கணிப்பின் பிரகாரம் யாழ்.வன்னி மாவட்டங்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பெருவெற்றியீட்டுவது நிச்சயம்.



ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் சுப்பிரமணியம்

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் 28 வருடங்களாக கிராமசேவையாளராகப் பணி புரிந்து ஓய்வுபெற்றவரும் சமூக சேவையாளருமாகிய சுப்பிரமணியம் சின்னத்தம்பி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; காலம் காலமாக எமது தமிழினம் தனது சுய உரிமைக்காகப் போராடி பலதரப்பட்ட சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்துவந்ததின் விளைவாகவும் இத்துன்பங்களிலிருந்து விடுபடும் முகமாகவும் இன்று மக்கள் அனைவரும் தாங்களாகவே முன்வந்து ஒருதலைமையின் கீழ் ஒரே அணியில் தமிழர் தேசியத்தினை சர்வதேச சமூகத்திற்கு வெளிக்காட்ட முன்வந்துள்ளனர். அந்தவகையில் சகல மாவட்ட மக்களும் தமிழ் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களுக்கு வீட்டுச் சின்னத்திற்கு தவறாது வாக்களிக்கவுள்ளனர்.

இதன் மூலம் யாழ்,வன்னி மாவட்டத்திலிருந்து தமிழ்த் தேசியகூட்டமைப்பு வேட்பாளர்களே முழுத் தொகுதிகளிலும் தெரிவு செய்யப்பெற்று வரும் பாராளுமன்றத்திற்குச் செல்வது திண்ணம்.

இத்தேர்தலில் தமிழர்களை காட்டிக்கொடுக்க முனைந்துள்ள ஒருசில வேட்பாளர்களான புல்லுருவிகள் இருந்த இடம் தெரியாது மக்களினால் தூக்கியெறியப் படுவது தற்போது உண்மையாகி விட்டது.

நாங்கள் முன்னர் தமிழர் கூட்டணிக்கு வாக்களித்தோம். அப்பொழுது தமிழ் மக்களுக்கு சுதந்திரம் வேண்டும்நாடு வேண்டும் என்ற கோரிக்கையோடு கூட்டணி போட்டியிட்டது. அப்போது ஆனந்தசங்கரி கூட்டணி சார்பில் இங்கு போட்டியிட்டார். அவ்வேளையிலும் நாங்கள் கொள்கைக்காக வாக்களித்தோமே தவிர ஆனந்தசங்கரிக்காக வாக்களிக்கவில்லை.

இப்பொழுது தமிழ்க் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஒட்டுமொத்த விருப்பத்தை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டும் கொள்கையுடன் போட்டியிடுகிறது. ஆனபடியால் கூட்டமைப்பின் வீட்டுச்சின்னத்துக்குத்தான் வாக்களிப்போம் என்றார்.

கரைச்சி வடக்குப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச செயலர் இராசதுரை சந்திரமௌலீசன் தேர்தல் குறித்து தெரிவிக்கையில்,

இன்று யாழ்.வன்னி மக்கள் தங்கள் அவல நிலைமைகளையும் தமிழ்த் தேசியத்தினையும் ஒருமித்த குரலில் சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதற்காக இத்தேர்தலினைப் பயன்படுத்த முன்வந்துள்ளனர் என்பதே வெட்டவெளிச்சமாக தெரிகின்றது.

இதன் காரணமாக இன்று நடைபெறவுள்ள தேர்தலில் வாக்குகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வீட்டுச்சின்னத்திற்கு வழங்கிசகல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களையும் வெற்றிபெறச் செய்வதாக யாழ்.வன்னி மாவட்ட மக்கள் உறுதிபூண்டுள்ளனர். இந்தவெற்றியின் மூலம் யாழ்.வன்னி மண்ணிலிருந்து தமிழத் தேசியத்திற்கெதிராக செயற்பட்டுவரும் ஒரு சில கோடரிக்காம்புகள் மண்ணை விட்டு விரட்டியடிக்கப்பட உள்ளமை தெளிவாகியுள்ளது என்றார்.

கிளிநொச்சி கனகபுரம் கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக 24வருடங்களுக்கு மேலாகப் பணி புரிந்து வந்த ஆர்.பி.இராசநாயகம் தனது தேர்தல் கணிப்புக் குறித்துத் தெரிவிக்கையில்;



கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர்

எனது எழுபது வயது அனுபவத்தில் இன்று நடைபெறும் தேர்தல் வாக்களிப்பில் யாழ்,வன்னி மாவட்ட மக்கள் கொண்டுள்ள ஆர்வமும் உற்சாகமும் போன்று கடந்த எந்தத் தேர்தலிலும் நான்கண்டதில்லை. என்னிலும் வயதுமுதிர்ந்தவர்கள் வயதினையும் பொருட்படுத்தாது தள்ளாத வயதிலும் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்ற அவாவுடன் புறப்பட்டுள்ளமையானது யாழ்வன்னி மாவட்டத்தில் கூட்டமைப்பின் அமோக வெற்றியென்பது நிருபித்துவிட்டது என்றார்.

கிளி. உருத்திரபுரம் கிராம அபிவிருத் திச்சங்கத் தலைவர் மனுவேல் பிள்ளை நீக்கிலஸ் தனது கருத்துக்கணிப்புக் குறித்துத் தெரிவிக்கையில்;

இம்முறை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சகல தொகுதிகளிலும் வெற்றிபெறுவது நிச்சயம். ஏனெனில் எமது கிராமத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்ற உணர்வுடன் ஒவ்வொரு வாக்காளர்களும் வாக்குச் சாவடிக்குச் செல்ல முன்வந்திருப்பது உறுதிபடக் கூறமுடிகின்றது. தமிழ்த்தேசியம், ஒரே அணியில் தமிழர் என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்ட இத்தேர்தல் வழிசமைத்துள்ளது என்பதனால் யாழ்,வன்னி மாவட்ட சகல வாக்காளர்களும் தங்கள் வாக்குகள் மூலம் இதனை வெளிப்படுத்த வந்துள்ளமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பூரண வெற்றியினைத் தெரிவித்து நிற்கின்றது என்றார். (சோ)

# இன்று யுத்தநிறுத்த மீறல்கள் ஏற்படாது கண்காணிப்புக்குழு பார்த்துக்கொள்ளும்

## -கண்காணிப்புக்குழு திருமலைத்தலைவர் தெரிவிப்பு

(திருகோணமலை)

தேர்தல் நாளன்று யுத்தநிறுத்த மீறல்கள் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ளும் பணியில் நாம் ஈடுபடுவோம் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலைக் கிளைத்தலைவர் கேர்ட்ஸ் பேர் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அலஸ்கார்டினில்அமைந்துள்ள லோட்டஸ் பார்க் ஹோட்டலில் இச் செய்தியாளர் சந்திப்பு இடம் பெற்றது. இதுவரை ஹோட்டல் கிளப் ஓசிலானிக்கில் தங்கியிருந்த திருமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் நேற்று தொடக்கம் லோட்டஸ் பார்க் ஹோட்டலுக்கு இடமாறினர். தேர்தல்தினத்தன்று மாவட்டம் முழுவதும் நடைபெறும் நடவடிக்கைகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் கேர்ட்ஸ்பேர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் தேர்தல் நிலவரத்தை அவதானிப்பது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுதலைப் புலிகள்,இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் சிவில் அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பதாகவும் கேர்ட்ஸ் பேர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். திருகோணமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இப்போது 32 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் எட்டுப் பேர் கடல் கண்காணிப்பாளர்கள் என்றும் கேர்ட்ஸ்பேர் தெரிவித்தார்.(25)

## வட,கிழக்கு தேர்தல் பாதுகாப்பிற்கு இராணுவத்தைப் பயன்படுத்துக

### சனாதிபதி சந்திரிகா உத்தரவு

தேர்தல் பாதுகாப்புகளுக்கு பொலிசாருடன் இராணுவத்தையும் பயன் படுத்தும் படி பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் திற்கு சனாதிபதி அறிவித்துள்ளார். முக்கியமாக வடக்கு கிழக்கு தேர்தல் பாதுகாப்புகளுக்கு இராணுவத்தினரையும் பொலிசாரையும் கடமையில் ஈடுபடுத்தும்படி சனாதிபதி கூறியுள்ளார். இது சம்பந்தமாக முப்படைத் தளபதிகளையும் சனாதிபதி செயலகத்திற்கு வரவழைத்து விஷேடகலந்துரையாடலை சனாதிபதி நடத்தியுள்ளார்.

# யாழ்.கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் விடுதலைப்புலிகள்-பொலிசார் சந்திப்பு

விடுதலைப்புலிகள் தரப்பிற்கும்-பொலிஸ் தரப்பிற்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரது அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்ட தலைமை அதிகாரி அனிற்றா மற்றும் பிரதம கண்கரணிப்பாளர் இஸ்மார் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழீழ நீதி நிர்வாக சேவைப்பொறுப்பாளர் பரா, யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரை யாழ்மாவட்ட முதன்மைப்பொலிஸ்மா அதிபர் வசந்தவணகுரு தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழுவினர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போது இன்று இடம்பெறவுள்ள சிறிலங்காவின் 13வது நாடாளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்களை சிறந்த முறையில் நடத்துவதற்கு வேண்டிய ஒத்துழைப்புக்கள் குறித்து விரிவாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது யாழ்மாவட்டத்தில் உள்ள சகல இடங்களிலும் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தல் வாக்கெடுப்புகளுக்கு சகலவிதமான ஒத்துழைப்புக்களையும் பொலிசார் வழங்குவர் எனவும் குறிப்பாக புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேச வாழ் வாக்காளர்களுக்காக முகமாலையில் இடம்பெறவுள்ள வாக்கெடுப்புகளுக்கு பங்கம் விளைவிக்காத வகையில் உரியநடவடிக்கைகளை மேற்கொண்டு ஒத்துழைப்பு வழங்குவர் எனவும் பொலிஸ் தரப்பு புலிகள் தரப்பினரிடம் உறுதியளித்துள்ளது. (33)

# ஈராக்கிலிருந்து வெளியேறப் போவதில்லை ஒப்பந்தகாரர் கொலைக்குப்பின் அமெ.அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கில் இருந்து வெளியேறப் போவதில்லை என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

பலூஜாநகரில் அமெரிக்காவின் நான்கு ஒப்பந்தகாரர்கள் கொலை செய்யப்பட்டுஅவர்களின் சடலங்கள் வீதிகளில் இழுத்துச் செல்லப்பட்டதை அடுத்து அமெரிக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட நான்கு பேரும் அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றிற்காக வேலை செய்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது

இவர்கள் மீதான தாக்குதல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது..




தாக்குதலுக்குப்பின் பலூஜா அமெரிக்கர்களின் புதைகுழி என எழுதப்பட்ட அட்டையுடன் ஈராக்கிய இளைஞன்.

# தகுதிவாய்ந்த அதிகாரியின் நியமனத்தை ரத்துச்செய்யக் கோரும் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் ஊடகங்களைப் பொறுப்பேற்ற பின்னர் அவரினால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிகளின் நியமனத்தையும் அந்த ஊடகநிறுவனங்களுக்கான வழிகாட்டிகளின் நியமனங்களையும் இரத்துச்செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது. சிறிலங்கா ரூபவாஹினிக்கூட்டுத்தாபனம் மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சுயாதீன தொலைக்காட்சிச் சேவை ஆகிய நிறுவனங்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவையே உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

# 85 கோடி ரூபாவுக்குமேல் தேர்தலுக்குச் செலவாகும்

இன்று நடைபெறவுள்ள தேர்தலுக்கு 85கோடி ரூபாவுக்கு மேல் செலவாகும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இத்தேர்தலுக்கு 62கோடி ரூபாசெலவாகும் என மதிப்பிடப்பட்டிருந்தபோதும் அது இவ்வாறு 85 கோடிக்குமேல் சென்றுவிட்டதாக மேலும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

# வன்முறைகள் இடம்பெறும் சாவடிகளின் வாக்களிப்பு ரத்துச் செய்யப்படும்

## தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

நடைபெறும் பொதுத் தேர்தலின்போது வாக்களிப்புக்களில் வன்முறைகள் நிகழ்ந்தால் அந்த நிலையங்களின் வாக்களிப்பை ரத்துச்செய்து மீண்டும் வாக்களிப்பு நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; எந்த வாக்களிப்பு நிலையங்களில் வன்முறைகள் நிலவுகின்றதோ அந்த வாக்களிப்பு நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தின் ஒட்டுமொத்தத் தேர்தல் முடிவுகளை அறிவிக்க அந்த வன்முறைகள் தடையாக அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளில் ஈடுபட்டு வாக்களிப்பு நிலையமொன்றின் வாக்களிப்பைக் குழப்ப யாராவது முன்வந்து வேட்பாளர் ஒருவரின் வெற்றிக்காகவோ மற்றுமொருவரின் தோல்விக்காகவோ துணைபோக எண்ணினால் இந்தமுயற்சி எதுவும் நிறைவேறாது.

ஏனெனில் அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்களிப்பையும் ரத்துச்செய்து மீண்டும் தேர்தல் நடத்தப்படும்.

அதேவேளை தேர்தல் நடைபெறும் தினமான இரண்டாந்திகதி வெள்ளிக்கிழமை ஆகவே அடுத்த நாள் சனிக்கிழமை மறுவாக்குப்பதிவிற்கு செல்லமாட்டோம், சட்டத்திற்கமைய ஞாயிற்றுக்கிழமையும் தேர்தல் நடத்த முடியாது அதனால் ஆறாம் திகதியே மறுவாக்குப் பதிவு நடைபெறும். இதனால் மாவட்டத்தின் ஒட்டுமொத்தத் தேர்தல் முடிவுகள் அறிவிப்பது தாமதிக்கும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வாக்குப்பதிவுகள் ரத்துச் செய்யப்படும் சம்வங்கள் பற்றி அவர் தொடர்ந்து கூறும்போது,

அதாவது வாக்களிப்பு நிலையங்களுக்கு அதிகாரிகள் செல்ல முடியாமல் ஏற்பட்டாலோ அல்லது வாக்களிப்பு நிலையங்களில் இருக்கும் அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகளை விரட்டி அடித்தாலோ, வாக்களிப்பு நிலையங்களின் வாக்குச்சீட்டுக்களை அபகரித்தாலோ வாக்குப்பெட்டிகளில் பலவந்தமாக வாக்குச் சீட்டுக்களை நிரப்ப முறபட்டாலோ, அதேபோன்று வாக்களிப்பு நிலையச் சிரேஷ்ட அதிகாரிக்கு நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் போனாலோ அந்த வாக்களிப்பு நிலையங்களின் வாக்குப்பதிவை தாம் ரத்துச்செய்வோம் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்ததுடன்,

வாக்களிப்பைக் காலை ஏழு மணிக்கு ஆரம்பிக்க முடியாது போனாலும் மாலை நான்கு மணிக்கு முடிக்க முடியாது போனாலும் வாக்குகள் எண்ணும் நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகளை ஒப்படைக்க முடியாது போனாலும் வாக்களிப்பு ரத்துச்செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மட்டு.அரசஅதிபர் மீதான தாக்குதல்; அரசியல் காரணங்கள் இல்லை

### -கிழக்குப்பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானமைக்கு எவ்வித அரசியல் காரணங்களும் இல்லை என கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக அரசாங்க அதிபரிடமும் சம்பவம் நடைபெற்ற போது வாகனத்தில் பயணம் செய்த இரண்டு நபர்களிடமிருந்து வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அண்மைக்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்காக விசேடபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# திலங்கசுமதிபாலவின் பிணைமனுவை விசாரிக்க இருந்த நீதிபதிகள் பதவிவிலகல்

சிறிலங்கா ரெலிகொமின் தலைவரும் சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் முன்னாள் தலைவருமான திலங்கசுமதிபால பிணையில் விடுதலை கோருவது தொடர்பான மனுவை விசாரணைசெய்யவிருந்த மேன்முறையீட்டு நீதிபதிகள் தமது பொறுப்புக்களில் இருந்து விலகியிருக்கின்றார்கள்.

மேன்முறையீட்டு நீதிபதிகளான சந்திரதாச நாணயக்காரா, காமினி அபேரட்ண ஆகியோரே தமது பொறுப்புக்களில் இருந்து தாங்கள் விலகுவதாக நேற்று அறிவித்துள்ளனர்.

இதேவேளை பிணைமனுவை விசாரிக்க புதிய நீதிபதிகள் குழுவொன்றை நியமிப்பதற்காக இந்தத தீர்மானம் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரிடம் அறிவிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையை தூண்டிவிட சிலர் முயற்சி

### சனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தி முஸ்லிம் சமூகத்தவருக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவது தொடர்பான தகவல் கிடைத்துள்ளதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இத்தகைய திட்டங்களை முறியடிப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து வாக்களிப்பதைத் தவிர்க்க வேண்டாம் எனவும் சனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

# தேர்தல் வன்முறைகள் 1347 ஆகக்கூடிய வன்முறைகள்அம்பாறையில்

(கொழும்பு)

நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்திலுள் 87 தேர்தல் வன்முறைகள் குறித்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றையும் சேர்த்து வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து இடம் பெற்றவன் முறைகளின் எண்ணிக்கை 1,347 ஆகும்.

இந்த வன்முறைகள் குறித்த முறைப்பாடுகளில் 495ஐ ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியும்,330 முறைப்பாடுகள் ஐ.தே.க.வினாலும் செய்யப்பட்டுள்ளன.

ஆகக் கூடுதலான முறைப்பாடுகள் அம்பாறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 112வன்முறைகள் இங்கு இடம்பெற்றதாக பதிவாகியுள்ளன. (32)

# தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் சம்பந்தனுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளராகப் போட்டியிடும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை திருகோணமலைப் பொலிசார் அதிகரித்துள்ளனர். சம்பந்தனின் வாசஸ்தலத்திற்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (25)

#### யாழ்..

இதேவேளை வன்னித் தேர்தல்மாவட்டத்தில் வேறு இனத்தவர்களும் வாழ்வதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு நூறுவீத ஆசனங்களும் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

இம்மதிப்பீடு பலதரப்பினர் மட்டத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டதொன்றாகும். குறிப்பாக அரச மற்றும் அரச சார்பற்ற பிரதிநிதிகள் [illegible]கள், மாணவர்கள், சமூகநலன் பேணும் அமைப்புக்கள், மதநிறுவனங்கள் என்பன இம் மதிப்பீட்டின்போது கருத்திற்கொள்ளப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

#### மட்டு..

வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர்.எம்.தேவராஜன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த மருத்துவமனையில் சத்திரசிகிச்சை என்பன நிச்சயமாகப் பாதிப்புக்குஉள்ளாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மறியல் போராட்டம் நண்பகல் ஒருமணி நேரம் இடம்பெற்றது. மேலும் ஒலிபெருக்கி மூலமாக விடுக்கப்பட்ட அறிவிப்புக்களை தொடர்ந்தே மருத்துவர்கள் போதனா வைத்தியசாலையிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த மருத்துவர்கள் திரும்பி வரவேண்டும் என்பதையே விரும்புகின்றோம் இல்லாது போனால் ஏற்படும் நெருக்கடிகளைப்போக்க இயன்ற வரைக்கும் எம்மாலான சேவையை ஆற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்றும் அவர் கூறினார். (32)

# நு ஆ ஆதரவாளர் வீடுமீது கைக்குண்டுத்தாக்குதல்

பேரியல் அஷ்ரப் தலைமையிலான நுஆ ஆதரவாளரின் வீடு நேற்று முன்தினம் கைக்குண்டு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

சாய்ந்த மருதுப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கூரை சேதமாகியபோதும் உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளரே இத்தாக்குதலை நடத்தியதாகவும் இது தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# திருமலை சுயேட்சைக் குழுவின் தலைமை வேட்பாளர் கூட்டமைப்புக்கு ஆதரவு

பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் சுயேட்சைக் குழு இலக்கம் ஆறு தலைமை வேட்பாளர் கோ.மாதவராசா கடந்த செவ்வாய்க்கிழமை திருமலையின் சுற்றுப்புறங்களில் இடம்பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரச்சாரக் கூட்டங்களில் பேசினார் "திருகோணமலை மாவட்டத் தமிழ்வாக்காளர்கள் இப்பொதுத் தேர்தலில் தமிழ்த தேசியக் கூட்டமைப்புக்கு ஒருமித்து வாக்களித்து திருமலை மாவட்டம் தமிழரின் பாரம்பரிய தாயகம் என்பதனை சர்வதேசத்துக்கு உணர்த்த வேண்டும் அத்துடன் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளரான இரா.சம்பந்தனின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்" என்று சுயேட்சைக் குழுவின் (6) தலைமைவேட்பாளர் மாதவராசா தெரிவித்தார். வரப்போகும் இடைக்கால தன்னாட்சி அதிகார கட்டமைப்பில் திருகோணமலை மாவட்டத்தில் பங்களிப்பு பாரிய முக்கியத்துவம் பெறப் போகின்றது அதனை உறுதி செய்வதாகவும் அவ்வாறான பங்களிப்பை முன்னெடுத்துச்செல்லக் கூடியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரான இரா.சம்பந்தனின் தலைமைத்துவத்தை பலப்படுத்துவதாகவும் திருமலை மாவட்ட தமிழ் வாக்காளர்களின் தீர்ப்பு அமைய வேண்டும் என்றும் மாதவராசா கேட்டுக் கொண்டார். சுயேட்சைக் குழு (6) வேட்பாளர் கள் சிலரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்பிரச்சாரக் கூட்டங்களில் உரைநிகழ்த்தினர். (25)

# தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவாக திருமுறிகண்டியில் தீப்பந்த ஊர்வலம்

வீடொன்று எமக்கு வேண்டும், வீட்டுச்சின்னத்திற்குப் புள்ளடி போடுவோம் சமாதானக்கதவைத் திறப்பதற்கு, எமது தேசம் எமக்குத்தேவை,என்ற கோசஙகள் வானைபிளந்து ஒலிக்க திருமுறிகண்டியில் தீப்பந்த ஊர்வல மொன்று நடைபெற்றுள்ளது.

இரவு 7.மணிக்கு ஆரம்பமான தீப்பந்த ஊர்வலத்தில் திருமுறிகண்டி இந்துவித்தியாலய மாணவர்களும் பெற்றோரும் கலந்து கொண்டனர்.

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயமுன்றலில் மங்கல விளக்கு ஏற்றப்பட்டு ஆரம்பமான இத் தீப்பந்த ஊர்வலம் இந்துபுரம், வசந்தநகர், செல்வபுரம் ஊடாக சென்று ஏ-9 பாதைஊடாக நள்ளிரவு இந்து வித்தியாலயத்தை வந்தடைந்தது திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவன் ந.தவச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வீட்டுச் சின்னத்திற்குவாக்களித்து எமதுவிடுதலைப் போராட்டத்தில் வெற்றிபெறுவோம் என முழங்கப்பட்டது.(09)

#### வீரவணக்கம்..

சின்னையா. வீரசிங்கம், திருநகர் கிளி நொச்சி த.மு.அரைஏக்கர் திட்டம் கனகாம்பிகை கோவிலடி கிளிநொச்சி) என்பவரே சாவடைந்தவராவார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

#### கருணா..

மக்களும் தமது வாழ்வியல் சுதந்திரத்தைக் கொண்டுள்ளனர். இதனை மீறிச் செயற்படுவது முழுமையான அத்துமீறல் சம்பவமாகும்.

எனவே இந்தப் பிரச்சினை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இல்லையேல் இலங்கையின் சமாதானத்திற்கு இது பாரிய அச்சுறுத்தலை விடுக்கக்கூடும்.

குறிப்பிட்ட தரப்புக்கள் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என ஐ.நா.அமைப்புக்கள் கேட்டுள்ளன.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைத் தேர்தல் கண்காணிப்பாளர் ஜோன் குஸ்ணகன் மட்டக்களப்பு நிலவரத்தை ஏற்றுக்கொள்ள முடியாத செயல் எனக் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாண மருத்துவர்கள் வெளியேற்றப்பட்டது மனிதாபிமானமற்ற செயல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

#### பல்லாயிரக்..

டுள்ளது. மக்கள் தேவை ஏற்படின்தொடர்கொள்ளுமாறு முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமல்டாசுகுமார் கேட்டுக் கொள்கின்றார். இன்று காலையில் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு பேருந்துக்கள் தயார் நிலையில் நிறுத் தப்பட்டுள்ளன. இம்மக்களை ஏற்றுவதற்காக வவுனியாவிலிருந்தும் 50 பேருந்துக்கள் தருவிக்கப்பட்டுள்ளன.

இன்று நடைபெறும் தேர்தலில் வாக்களிப்பதற்காக நேற்றுக் காலை 10 மணியில் இருந்து பளைப் பகுதி நோக்கி கிளிநொச்சி மாவட்ட மக்கள் அலை அலையாக திரண்டு சென்று அங்கு பல்லாயிரக்கணக்கில் கூடியுள்ளனர். பேருந்துகள் பாரஊர்திகள், உழவுஇயந்திரங்கள் மூலம் பளைப்பகுதியை சென்றடைந்துள்ள பல்லாயிரக் கணக்கான மக்களையும் ஒழுங்குபடுத்தி சரியான முறையில் காலதாமதமின்றி வாக்களிப்பதற்கான அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன இதேவேளை இவ்வாறு கூடியுள்ள மக்களுக்கு தேவையான உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் அனைத்தும் மேற்கொளப்பட்டுள்ளன.

இவ்வாறு பளைப் பகுதியின் பல்வேறுபட்ட இடங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ள வாக்காளர்களில் ஒழுங்குபடுத்தி தேர்தலில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை கிளி.அரசஅதிபர் தி.இராசநாயகம், உதவிஅரச அதிபர் பொன்.நித்தியானந்தம் மற்றும் அரசஅதிகாரிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் ஈடுபட்டுள்ளனர்.

மக்கள் வாக்களிக்கும் போது ஏற்படும்சிரமங்களைத் தவிர்ப்பதற்காக வாக்குச் சாவடி அமைந்துள்ள இடத்துக்கு மிகவும் அண்மையில் கிளி.அரசஅதிபர் தி.இராசநாயகம் தலைமையிலானவர்கள் அலுவலகம் அமைத்து தங்கியிருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20,லோ,பி)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.